# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

( செய்தித்தாளாகப் பதிவுபெற்றது )

95-ம் புத். | 1970-ம் ஆண்டு பங்குனி மாதம் 7-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 9-ம் இல.


**எழுத்தாளர் கவனத்திற்கு!**

காவலன் பரிசுத்தவாரச் சிறப்பிதழுக்கான கவிதைகள், கதைகள், கட்டுரைகளை வரவேற்கிறோம். அனுப்புவோர் பங்குனித்திங்கள் 10-ம் தேதிக்கு முன்பதாக எமது அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.

— ஆசிரியர்

# மாவலி திசை திருப்பும் வேலை

## ஆரம்பமாயிற்று

20-ம் நூற்றாண்டில் இலங்கையில் நடந்த மிகச் சிறந்த ஆக்கவேலை யாது என ஒருவர்கேட்பாராகில் அதுவே மாவலி கங்கை திசைதிருப்பும் வேலை என கூசாது சொல்லிவிடலாம். மாவலி கங்கையே இலங்கையில் மிகப்பெரிய நதி. இதன் நீர் இன்று கடலில் பாய்ந்து வீணாகின்றது. இவ்வாற்றின் திசையை மாற்றிக் கடலில் அவம் போகும் நீரைத் தரைக்கு நீர்ப்பாய்ச்சிப் பயன்பெற ஒரு திட்டம் அமைக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதற் கட்டத்தைச் சென்றவாரம் பிரதம மந்திரி திரு டட்லி சேனநாயகா கண்டிப்பகுதியில் பொல்கல என்னும் கிராமத்தில் சமய அரசாங்க சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைத்தார். இம்முதற்கட்டம் முற்றுப்பெற 5 வருடங்கள் செல்லுமென மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இக்கட்டம் முடிவு பெறும்பொழுது, வடமத்திய மாகாணத்தில் பெரும்பகுதி நிலத்துக்கு மாவலி கங்கையிலிருந்து நீர்ப்பாசன கைத்தொழிற் சக்தி வசதிகள் அளிக்கப்படும். அதன்பின் நடக்க இருக்கும் இரண்டாம் பகுதிக் கட்டத்தின் பயனாகவே வடமாகாண நிலங்கள் பயனடையும்.

## இன ஒதுக்கத்தை

### அதிமேற்றிராணியார் கண்டிக்கிறார்

தென்னாபிரிக்க டேர்பன் நகர அதிமேற்றிராணியார் ஹேர்லி அடிகளார் தென்னாபிரிக்க அரசாங்கத்தின் இன ஒதுக்குப் போக்கை அண்மையில் தம்மக்களுக்கு எழுதிய நிருபத்தில் காரசாரமாகக் கண்டித்திருக்கிறார். "ஓர் இனம் மற்ற இனங்களிற் பார்க்க முக்கியத்துவம் உடையது என்னும் பிழையான அபிப்பிராயத்தை "ஸபாட்டெயிட்" என ஆபிரிக்க பாஷையில் அழைக்கப்படுகின்ற இன ஒதுக்குக்கொள்கை அடிப்படையாக அடக்கியுள்ளது. கத்தோலிக்கர் முதன்முதல் கிறிஸ்துநாதருக்கும் அவர் போதனைகளுக்கும் பிரமாணிக்க முடையவர்களாய் இருக்க வேண்டும் அதன்பின் தான் அரசாங்க பிரமாணிக்கம் இடம்பெறுகின்றது. கிறிஸ்துநாதர் உலக மக்கள் யாவரினுடைய சகோதரத்துவத்தைப் போதித்திருப்பதை நாம் மறந்துபோய் எக்காரணத்துக்காகவும் ஓர் இனம் மற்ற இனங்களிலும் பார்க்க உயர்ந்தது என எண்ணப்படாது" என ஹேர்லி அடிகளார் அந்நிருபத்தில் கூறியிருக்கிறார்.

### உலக ஆயர் மன்றத்துக்கு வத்திக்கானில் நிரந்தர நிர்வாகக்குழு

சென்ற வருடம் ஐப்பசி மாதம் வத்திக்கானில்கடந்த உலகஆயர் சினொட்டில் நடந்தபல விஷயங்களுள் ஆயர்மன்றத்துக்கு வத்திக்கானில் நிரந்தர நிர்வாகக் குழு நியமிப்பது முக்கியம் வாய்ந்ததாய் இருந்தது. சினொட் முடிந்து இருமாதங்களுள் நிர்வாகக் குழுவுக்குரிய அங்கத்தவர்களை தபால்முறை மூலமாக ஆயர் தெரிந்து கொண்டனராயினும் அம்முடிவுகள் இன்னும் வெளியாக்கப்படவில்லை. தேர்தல்மூலம் இவ்வாறு நியமனம் பெறும் ஆயர்மாரின் பெயர்களையும், திட்டத்தின்படி பாப்பரசர் குறிக்க இருக்கும் நியமன அங்கத்தவர்களின் பெயர்களையும் பரிசுத்த தந்தை விரைவில் வெளியிடுவாரென வத்திக்கான் வட்டாரங்கள் கூறுகின்றன.

### கேம்பிறிட்ஸ் சர்வகலாசாலை

#### மிகப் புராதனமானது

இதுகாலவரையும் 14ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கியதெனக்கருதப்பட்ட கேம்பிறிட்ஸ் சர்வகலாசாலையானது, ஒரு குருவானவர் செய்த ஆராய்ச்சியின் பயனாக அது 12-ம் நூற்றாண்டில் ஸ்தாபிக்கப் பட்டதெனவும், ஐரோப்பாக் கண்டத்திலேயே மிகப்புராதன சர்வகலாசாலை எனவும் அத்தாட்சிப் படுத்தப்பட் டிருக்கின்றது. வண. பெனடிக்ற் ஹக்கற் என்னும் சுவாமியார் வத்திக்கான் நூற்சாலையில் புனித அகுஸ்தீனார் சபையினரின் வேலைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்தபொழுது, கேம்பிறிட்ஸ் சர்வகலாசாலையின் நிறுவன சட்டங்களைக் கண்டெடுத்தார். இச்சட்டங்கள் சென்றமாதம் சர்வகலாசாலைச் சஞ்சிகையில் முதன் முதல் அச்சிடப்பட்டது.

### அபிவிருத்தியை வளர்க்க அதிசிறந்தவழி

"ஒருதேசத்தின் அபிவிருத்தியை வளர்த்து அதிவிரைவில் பயனடையச் செய்கிறதற்கு உள்ளமிகச்சிறந்தவழி அத்தேசத்திலுள்ள அச்சுவித்தை, வானொலி, படக்காட்சி, தொலைக்காட்சி முதலியனவற்றை புத்திசாலித்தனமாக உபயோகித்துக் கொள்வதேயாகும்" — இவ்வாறு இலங்கைக்கு சென்றவாரம் விஜயம்செய்த அபிவிருத்தி விற்பன்னராகிய அமெரிக்கர் திரு. டானியல் லேணர் கூறினார். விவசாயம் கைத்தொழில் முதலியனவற்றின் அறிவைப்பரவச் செய்வதற்கு அமெரிக்க நாட்டிலே அச்சுவித்தை, வானொலி முதலியன பலகாலமாக உபயோகிக்கப் பட்டமுறைகளையும், சென்ற சில வருடங்களாக படக்காட்சிகளும் மிக அண்மையில் தொலைக் காட்சியும் பயனபடுத்தப்படும் வகைகளையும் அவர் விளக்கி, இலங்கை தீவிரமாக முன்னேறுவதற்கு இவ்வழிவகைகளை நாம் எவ்வாறு உபயோகிக்க வேண்டுமென்றும் எடுத்துக் காட்டினார்.

## கலப்பு விவாகப் பிரச்சினை தீர்க்க வழி காண வேண்டும்

சென்றவாரம் அங்கிளிக்கன் சபையின் பிரதம மேற்றிராணிமாரில் ஒருவராகிய டாக்டர் ஜோண் மூர்மன், ரோமாபுரியிலுள்ள அங்கிளிக்கன்சபை நிலையத்தவரின் சார்பாக பாப்பரசரிடம் சென்ற ஒரு கோஷ்டிக்குத் தலைமை தாங்கிச் சென்றார். இரு சபைகளுக்குமிடையில் ஒற்றுமைஏற்படுவதற்குத் தடையாக இருக்கும் பல சிக்கல்களைக் குறிப்பிட்டு அவைகளை யாவற்றிலும் கூட்டுவிவாகச் சிக்கல் மிகக் கவலைகொடுப்பதாக அவர் பாப்பரசருக்கு எடுத்துக் கூறினார். பரி. தந்தை அவர்களுக்கு அளித்த மறுமொழியில் முன் இருந்த சிக்கல்கள் பல அகன்றுவிட்டது போல் கூட்டுவிவாகச் சிக்கலும் அகலும்நாள் வருமெனவும், அதற்கு இரு பகுதியினரும் செபத்துடன் உழைத்துவரவேண்டுமெனவும் கூறி, ரோமாபுரியிலுள்ள அங்கிளிக்கன் சபை நிலையத்தார் செய்துவரும் அரும்பெரும் முயற்சிகளுக்காக அவர்களைப் பாராட்டினார்.

## பலசமய மகாநாடு

கிறிஸ்தவ சபைகளின் உலக சங்கம் உலக மக்களிடையே ஒற்றுமைகாண்பதற்கும் சமாதானம் நிலவுவதற்கும் போற்றுதற்குரிய பலமுயற்சிகளைச் செய்துவருவது யாவரும் அறிந்த விஷயமே. இம் மாதத்தில் அது செய்ய இருக்கும் சாதனைகளுள் லெபனன் தேசத்திலே நடத்த இருக்கும் பலசமய மகாநாடு முக்கியத்துவமுள்ளது. இம்மகாநாடு லெபனன் தேசத்திலுள்ள பெய்றூட் என்னும் நகரில் நடத்தப்பட இருக்கிறது. உலகத்தில்பெருந்தொகையினராக இருக்கும் சமயத்தவர்களாகிய கிறிஸதவர்கள், பௌத்தர், இந்துக்கள், இஸ்லாமியர் ஆகியாரின பிரதிநிதிகள் இம்மகாநாட்டில் பங்குபெறுவர்

## சமய போதனைகளுக்கு ஊக்கம் தர

கொழும்பு நகரிலே வேலையகங்களின் மத்தியாகிய கோட்டைப்பகுதியிலே மத்தியான போசன நேர சிறு ஓய்வுநேரத்தை சிறப்பாகப் பயன்படுத்தக் கிறிஸ்தவசபைத் தேவாலயமாகிய புனித பேதுரு தேவாலயம் அண்மையில் உபயோகிக்கப்பட்டு வருகின்றது நல்லொழுக்க முறைகளையும் சமயபோதனைகளையும் புகட்டச் சிறு பிரசங்கங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இச்சிறு பிரசங்கங்களின் சாரத்தை மனதில் அழுத்தத்தக்கதான சிறு கலாச்சார நிகழ்ச்சிகளும் பிரசங்கம் செய்பவர் நடத்துகின்றார். சென்ற மாசி மாதம் 22-ம்திகதி "கடவுளில் நம்பிக்கை" என்ற விஷயமாகப் பேசிய திரு. எம். டி. லனரோல் நீகிரோ மக்களின் ஆன்ம பாடல்கள் பலவற்றையும் தனது பிரசங்கத்துடன் சிறப்பாகப் பாடினார்.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழைத்தலின் பெருமை

மாலைப் பொழுது. கதிரவனின் ஒளிமங்கிய வேளை. இருள் இலேசாகப்படர தெருக்களில் உள்ள மின்விளக்குகள் பிரகாசிக்கின்றன. விளையாட்டிலே சோர்வடைந்த சிறுவர் சிறுமியர் வீடுகளை நோக்கிச் செல்லுகின்றனர். வயலிலே இருந்து உழவர்களும் கலப்பைகளோடு வீடுதிரும்புகின்றனர். இரைதேடச்சென்றிருந்த பறவைகளும் தங்கள் கூடுகளை வந்தடைகின்றன. தெருவின் ஒருகோடியிலே ஒலிபெருக்கியின் சத்தம், மறுகோடியிலே வண்டிகள் போவதும், வருவதுமான ஓசை. இவ்வோசையின் நடுவே கோவிலமணி டாங்! டாங்! டாங்! என அலறுகிறது. கையிலே ஜெபமாலையை ஏந்திக்கொண்டு சிறார்களுடன் தாய்மார்கள் கோவில செல்லும் காட்சி. ஆனால்......தெருவின் ஒரு பக்கமிருந்து ஏதோ அழுகைக்குரல் 'நான் இல்லையப்பா, நான் இல்லையப்பா'' என்று இரக்கம மிகுந்த குரலில் தொனிக்கிறது. ஆனல் பக்திநிறை தந்தை அடிமேல அடி அடிக்கிறார் தம மகன் அருளப்பனை. தாய் எவ்வளவு தடுத்தும் பயனற்றுப்போய் விடுகிறது.

அக்கம்பக்கமெல்லாம் சூழ அடிவாங்கும் அளவிற்கு அவன் என்னசெய்து விட்டான் என்று வினவுகின்றனர் அயலவர். "பள்ளி சென்றுதிரும்பியவன் கடையிலே எதையோ எடுத்து விட்டானும்'' என்று ஆவேசக்குரலில் கூறுகிறார் அருளப்பனின் தந்தை அடைக்கலம். என் பெயருக்கே இழுக்கைத் தேடிவிட்டானே என்று கோலேஓங்க, அருகில் நின்றவர்கள் தடுக்கின்றனர். என் மகன் நல்லவனயிற்றே அவ்வாறெல்லாம் செய்யமாட்டானே என்று ஒருபுறம் தாயின் குரல். அக்கம் பக்கத்தாரும் தங்களையே நம்பமுடியாமல் திகைக்கின்றனர். அப்படி இருந்தாலும் சிறுவனை இப்படியா அடிப்பது என்று ஒரு சிலர் குரல் எழுப்புகின்றனர்.

அடிவாங்கிய அருளப்பனே தேம்பித்தேம்பி அழுதுகொண்டு பார்வையைத் திருப்புகிறான் ஆங்கே அவற்றில் காட்சியளித்த அன்னையின் படம் அவனை வா, வா என்று அழைப்பது போலிருந்தது. படத்தின் அருகில் சென்றான்: அன்னையே! குற்றமற்ற நான் தண்டிக்கப்பட்டேன். உமக்காக இதை ஏற்றுக்கொள்ளுகிறேன் எனக் கதறி அழுகின்றான். பெற்றமனம் பித்தல்லவா? தந்தை தன்னையே மறந்து மகனைக் கட்டியணைத்து முத்தமிடுகிறார். தந்தையின் அரவணைப்பு அவனுக்கு மிகஆவேசத்தை எழுப்பியது. அழுகையோ கண்களைப் பொத்துக்கொண்டுவர, தந்தையின் அரவணைப்பிலிருந்து நழுவி வெளியே செல்லுகிறான்.

தெருவினூடே வளைந்து, வளைந்து சென்றவன் கோவில் வந்தடைந்தான். ஆங்கே தன்னையொத்த சிறுவர்கள் செபமாலையுடன் செபிப்பதைக் கண்டான். தானும் செபமாலையை எடுத்துச் செபிக்க ஆரம்பித்தான். கண்ணீரோ அவனையறியாமல் வந்துகொண்டிருக்க, சிந்தனை சிதற, பீடத்தையே வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

வெகுநேரமாகியும் மகன் வீடு திரும்பாமற் போனதால் தந்தை கலக்கமுற்றுத் தெருக்கள்தோறும் சென்று தேடியும் அருளப்பன் அகப்படவில்லை. எங்கேயாவது ஓடிவிட்டானே என்ற அச்சம் ஒருபுறம், தண்டித்துவிட்டோமே என்ற கவலை ஒருபுறமிருக்க—தனது களைப்பையும்

**D. யோசவ்,**
**வேதியர் பயிற்சிப்பள்ளி,**
**பூந்தமல்லி.**

பொருட்படுத்தாது கோவிலை அடைகிறார். அங்கே அவர் கண்டது கனவா அல்லது நனவா என்று அவருக்கே தெரியவில்லை. தனிமையில பீடத்தடியில குப்புற விழுந்து கிடந்த மகனைக் காணகிறார். இறைவா! நீயே என் அடைக்கலம் என்று தஞ்சம் புகுந்தவனைப்போல் கிடக்கிறான். தந்தையோ கணகலங்கி இறைவன் முன் மன்னிப்புக் கேட்கிறார், மகனை அரவணைக்கிறார். இருவருமாக வெளியே வருகின்றனர். அவ்வேளை ஓடோடி வந்த பீற்றர் திருடியது அருளப்பன் அல்ல எனக்கூற, ஆத்திரம் பொங்கத் தடி ஒன்றை எடுக்கிறார் அடைக்கலம். கடைக்காரனது காலை ஒடிக்கும் எண்ணம்போலும். ஆனல் பீடத்திலிருக்கும் இறைவன், குற்றம் செய்தவன் நீதான் அடைக்கலம். ஆர அமர விசாரிக்காமல் வீணாகக் கோபப் பிடியிலே சிக்கிகொண்டாய். அமைதியாகப் போ என்பது போலிருந்தது. தடி கையிலிருந்து நழுவ, மகனுடன் கோவிலினுள் செல்கிறார். என்னிடமுள்ள கோபப்பேயை அழித்துவிடு இறைவா, அழித்துவிடு என்று வேண்டியபின வீடு வந்தடைகிறார். தன் மகன் திருடனல்ல, என்பதைத் தாயும் கேள்விப்படுகிறாள்.

வருடங்கள்பல உருண்டோடின. அருளப்பன் ஓர் உத்தம குருவாகக் காட்சி அளிக்கிறான். அன்று குற்றமின்றித் தணடிக்கப்பட்டவன் இன்று ஒரு குருவாக நிற்கிறான் தம பெற்றோருடன். "ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்'' என்பதற்கொப்பப் பெற்றோர் இருவரும அவன்முன் ஆசிர்வாதங்க மணடியிடுகின்றனர்.

நாட்கள் பல ஓடின. பெற்றோரின் ஆசீரைப் பெற்று நற்செய்தியைப் பரப்புவதே நற்செல்வம் என்று கூறியவனாய்க் கிளம்புகிறான் இறையரசைப் போதிக்க.

---

இளவாலை
**திருமதி அன்னம்மா செபஸ்தியாம் பிள்ளையின் மறைவு**

காலஞ்சென்ற இளவாலை, திரு. செபஸ்தியாம்பிள்ளையின் மனைவியும், திருமதி லூர்து மனுவேற்பிள்ளை, திருமதி யோசபின் பொன்னையாவின் தாயாருமான திருமதி அன்னம்மா செபஸ்தியாம் பிள்ளை 3–3–70இல் காலமாயினர். இவரின் ஆத்துமஇளைப்பாற்றிக்காகச் செபிக்கும்படி இவரின் சகோதரர் வண. எஸ். எஸ். வில்லவரசிங்கம் சுவாமியார் இதைக்கண்ணுறும் யாவரையும்தயவாகவேண்டுகிறார்.

---

## தவறிய பாதையி ...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு கத்தோலிக்கரும் தமது வயதிற்கும் அறிவிற்கும் அனுபவத்திற்கும் சரீரத்திற்கும் ஏற்றவகையில் தன் அந்தஸ்தின் கடமைகளை உணர்ந்தவர்களே. கடமைக்கு எதிராய்ப்புரிந்த பாவங்களுக்குப் பரிகாரம்பண்ணுவது அவசியம். "மாமிசத்தின் இச்சையும் கண்களின் இச்சையும் பெருமையுமே நமது பெரிய எதிரிகள்'' (அரு. 2: 16). இவைகளைக் கொண்டு தமமையே பரீட்சித்த சாத்தானை அடக்க ஏற்றபோராயுதம் தபசு ஒன்றுதான் எனக் கிறீஸ்துநாதரே எமக்குப் படிப்பித்திருக்கின்றார்.

"இதோ இப்பொழுதே அனுக்கிரகத்தின் காலம்,'' "இதோ இப்பொழுதே இரக்கத்தின் காலம்,'' "மனந்திரும்புங்கள்; ஏனெனில் விண்ணரசு சமீபித்திருக்கிறது'' என வனாந்தரத்தில் அன்று ஒலித்த அருளப்பரின் அதே குரல இன்றும் எதிரொலிக்கிறது. குறிப்பாக இந்தத் தபசுகாலத்தில் கிறீஸ்தவர் இதயங்களில் இவ்வெதிரொலி சப்திக்கிறதற்கு இடமுண்டு. காலத்தைக் கவனமின்றிக் கடத்தினல் பின்பு அதற்காக வருந்திப் பயன்பெறமுடியாது.

காலம் கடந்துவருகின்றஉலகிலே மனதிற்கு எதிராய் மலைபோல திரண்டுவரும தீயசக்திகளுக்கு எதிராய்ப் போர்புரிவதே தபசில சிறந்த தபசென லாம். இதற்குச் சுயபரித்தியாகம் வேண்டும். அதுவே அவசியமாகும். புலன்களை அடக்கி ஆளவேண்டும். இவ்வாறு நமது பாவங்களுக்காக நாமே இறக்கக் கற்றுக்கொண்டால் மாத்திரமே உயிர்த்தெழும் கிறீஸ்துவின் மகிமையில நாமும பங்குபெறக் கூடும். "எமது உடலில் கிறீஸ்துவின் வாழ்க்கை விளங்கும்படி எங்கள் உடலில் இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் சுமந்து கொண்டே போகிறோம்'' (2 கொரி. 4: 10).

எனவே கத்தோலிக்க கிறீஸ்தவமக்கள் நடைபெறும் இந்த நாற்பதுநாட் தபசுகாலத்தினை ஏற்றமுறையில் பயன்படுத்த முயற்சியும் ஊக்கமும் எடுப்பார்களாக!

---

## நன்றி

எமது சிரேஷ்ட புதல்வன் செல்வன் கொன்ஸ்ரன்ரைன் டியூக் என்பவரின் ஈமச்சடங்கில் பங்குகொண்டு இறுதி மரியாதையைத் தெரிவித்து நின்ற அதி. வந்தனைக்குரிய துணை ஆயர் L. R. அன்ரனி அவர்களுக்கும், சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்கள், சந்தியோகுமையோர் பங்குக் கட்டளைக்குரவர், மற்றும் வண. குருப்பிரசாதிகள், சங். கன்னியர்கள், நண்பர், உற்றார், உறவினர்களுக்கும், அனுதாபச் செய்தியை அனுப்பிவைத்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். பிரத்தியேக முறையில் நன்றி தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

திரு. திருமதி கி. வெல்லும்

---

"எனக்கு அறிமுகமானவர்கள், என்னை அன்போடு நேசித்தவர்கள் அனைவரதும் செபங்கள் இத்தருணம் எனக்குத் தேவை''
— புனித எப்ரேம்

# நினைவு கூருவோம்

பறப்பாங்கண்டல், பெரியகுளம்
**பிலிப்பு எலியாஸ்**
(இளைப்பாறிய கிராமவிதானையார்)
அவர்களின்

## 6-ம் வருட மரண ஞாபகம்

பிறப்பு: 1–4–1889 இறப்பு: 8–3–1964

எனது அன்புமிக்கபத்தாவும், எங்கள் நேசத் தந்தையும், மாமனும், பாட்டனுமான பிலிப்பு எலியாஸ் இம்மண்ணுலகைநீத்த ஆறும் வருடம் இம்மாதம் 8-ம் திகதி பூர்த்தியாகிறபடியால், அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக அடுத்தநாள் (9-3-70) காலை 7 மணிக்குப் பறப்பாங்கண்டல் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியர், கிறீஸ்தவர்கள் அனைவரும் இவரின் ஆன்ம சாந்திக்காக வேண்டிக்கொள்ளும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்
மனைவி: இசபெல் அழகம்மா
மக்கள்:
திருமதி அக்னெஸ் டெனிஸ்,
சவுனம்மா மரியதாஸ்,
அடைக்கலம் பாலதாஸ்,
நீற்று சந்தியோகு,
பாலசிங்கம், ரட்ணசிங்கம்.
மருமக்கள்:
அந்தோனி டெனிஸ், வ. அ. மரியதாஸ் (உபதபாலதிபர், பறப்பாங்கண்டல்), ம. அ. பாலதாஸ் (கிராமப் பயிர்ச்செய்கை மேற்பார்வையாளர், சிலாபத்துறை), அந்தோனி சந்தியோகு, திருமதி ஞானப்பு பாலசிங்கம் (ரே. க. பாடசாலை, நொச்சிக்குளம்), திருமதி செல்வராணி ரட்ணசிங்கம்.

பேரப்பிள்ளைகள்:
சங். சகோதரி மேரி கிளிற்றஸ்,
சங். சகோதரன் செல்வேந்திரன்
(F. S. C., தூத்துக்குடி)
மற்றும் பேரப்பிள்ளைகள்.

•

## 12-ம் வருட மரண ஞாபகம்

"சுவாமி! பாதாளத்திலே நின்று உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; சுவாமி, என் சத்தத்தைக் கேட்டருளும்.''

பிறப்பு: 11—5—1907 இறப்பு: 10—3—1958

**"மிகவும் மதுர யேசுவே தேவரீர் சிலுவையில் தொங்கும் பொழுது அனுபவித்த அளவில்லாத கஸ்திநோவுகளைப் பார்த்து நித்திய இளைப்பாற்றியை எம். எஸ், பெரேரா அவர்களுக்கு அளித்தருளும் சுவாமி. முடிவில்லாத ஒளி இவருக்குப் பிரகாசிக்கக் கடவது.''**

எனது அன்புமிக்கபத்தாவும், எங்கள் அருமைத் தந்தையுமாகிய எம். எஸ். பெரேரா (தலைமை ஆசிரியர்) அவர்கள் எம்மை மாறாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு அமலனின்பாதஞ்சேர்ந்த 12-ம் ஆண்டு நிறைவுதினம் இம்மாதம் 10-ந்தேதி (10-3-70) பூர்த்தியாகின்றமையால், இத்தினம் சிலாபம் புனித பென்னேதேத்தம்மாள் ஆலயத்தில் அவருடைய ஆன்மசாந்தியின் நிமித்தம் ஒரு துக்கப்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியர், இனசனர், நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் யாவரும் தங்கள் செபங்களில் இவரை நினைவு கூரும்படி பரிவாய் வேண்டுகின்றோம்.

அருமைப் பத்தாவை இழந்து டரதவிக்கும்:
**எம், மாகிறேட் பெரேராவும்**
அருமைத் தந்தையை இளந்து துயருறும்:
**பிள்ளைகளும்.**

23-70

•

திரு. சீமான்பிள்ளை ஆரோக்கியநாதர்
**அவர்களின்**

## 23-ம் வருட மரண ஞாபகம்

**6—3—1970**

இலங்கை அரசாங்க புகையிரதப்பகுதியில் கிறேற் வெஸ்ரேன் ஸ்ரேஷன் மாஸ்ரராகச் சேவை புரிந்த எனது அருமைப் பத்தாவும், எமது பிரிய பிதாவுமான திரு. சீமான்பிள்ளை ஆரோக்கியநாதர் இவ்வுலகை விட்டு மறைந்த 23-ம் வருடம் இம்மாதம் 6-ந் தேதி வெள்ளிக்கிழமை பூர்த்தியாகின்றது. அன்று தினம் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் யாவரும் இவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

துயருறும் மனைவி:
மரியநாயகி ஆரோக்கியநாதர்
மக்கள்:
டக்றர் ஆ. இம்மனுவேல்,
இம்மனுவல் நவரட்ணராசா
(நீர்ப்பாசன இலாகா),
இம்மனுவல் இக்னேஷஸ்
ரட்டினராசா.
மருமக்கள்:
பிலோமினு ஆரோக்கியநாதர்
(அப்போதிக்கரி).
ராசேஸ்.

•

**பிலிப் கஸ்மீர்** அவர்களின்

## 25-வது வருட மரண ஞாபகம்

பிறப்பு: 15—9—1884 இறப்பு: 5—3—1945

"சீவியத்தில் இவரை நேசித்தவர்களே, மரணத்திலும் மறவாதீர்கள்.''

இதைக் கண்ணுறும் அனைவரும இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இவரை இழந்து பரதவிக்கும்:
மனைவி, மக்கள், பேரர்.

83, கடற்கரைவீதி,
நீர்கொழும்பு.

22-70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பங்கள் பெருகிய புண்ணிய பூமி

கிறிஸ்துபெருமான் ஜனக் கூட்டத்தினின்றும் சிறிது ஒதுங்கி இறை வழிபாடு செய்ய எண்ணினார். எனவே படகொன்றில் ஏறி வனாந்தரமான ஓரிடத்துக்குச் சென்றார். ஆயினும் அவர்சென்ற இடத்தையறிந்து மக்கள் வெள்ளம் அங்கு திரண்டது. அங்கு அவர்கட்குப் பல புத்திமதிகளையும் எடுத்துரைத்தார்.

அவர்களின் ஆன்மீக உணவுக்கு வழிகாட்டிய கிறிஸ்து, உடற்பசியைப் போக்கவும் எண்ணினார். இச்சனங்கள் பட்டினியின்றித் தங்களில்லங்கள் போய்ச் சேரவேண்டும் என்று ஆசித்தார். அத்துடன் சீவிய அப்பம்தாமே என்பதை எடுத்துக் காட்டவும் விரும்பினார்.

கிறிஸ்துவின் சீடர்கள் திகைப்புற்றனர். இந்தச் சிறியகிராமத்தில் அப்பெரிய ஜனத்திரளுக்காகிய உணவுக்கு என்ன செய்வது? எனினும் ஒருபையன் தன் குடும்பத்தினருக்குத் தேவையான உணவை அதாவது ஐந்து அப்பங்களையும் இரு மீன்களையும் தன்வசம் வைத்திருப்பதை ஒருவர் சுட்டிக் காட்டினார்.

அந்த அப்பங்களையும் மீன்களையும் கொண்டு அங்கிருந்த அத்தனை பேரும் வயிறார உண்ணச் செய்தார் இறைமகன்கிறிஸ்து. அன்று பந்தியமர்ந்த ஆடவர்கள் மட்டும் ஐயாயிரவர் என்கிறார் புனிதரான மத்தேயு. இப்புதுமை நடைபெற்ற அவ்வனாந்தரத்தைப்பற்றித் தற்போது பல தகவல்கள் வெளியாகியுள்ளன. அடுத்த ஞாயிறன்று

— சாமுவேல் பேனடிக்ற் —

சுவிசேஷத்தில் நாம் இப்புதுமையை நினைவு கூருவோம் அல்லவா?

கலிலேயாக் கடலின் வடமேற்குப்பாகமாகவே கிறிஸ்துபிரான் அத்தருணத்தில் பிரயாணம்செய்தார் என்பது விவிலிய ஆராய்ச்சியாளரின் முடிவு. வனாந்தரம் என்பது அதிகமாக மக்களால் தேடப்படாத பிரதேசம் என்றே கொள்ளலாம் ஏனெனில் மக்கள் புல்தரையின் மேல் பந்தியமர்ந்தார்கள்என விவிலியம் கூறுகிறது. இப் புல்வெளியிலிருந்து வடக்கே இருமைல் தொலைவில் கப்பர்னாவும் கிராமம் அமைந்துள்ளது.

இவ்விடம் குன்றுகளடர்ந்த ஒரு பிரதேசமாகும். கிறிஸ்துவின் மரணத்துக்குப் பின் அவரது அடியார்கள் திருப்பாடுகளின் தலங்களைத் தரிசிக்க வந்தபோது, இவ்விடத்தையும் தரிசித்திருப்பர் என்று எண்ண இடமுண்டு. இவர்களுள் ஸ்பெயினைச் சேர்ந்த ஈதுரியா என்ற மங்கையும் ஒருவர். ஈதுரியா கி. பி. 386-ல் பாலஸ்தீனாவுக்குத் திருயாத்திரை செய்தார்.

தம் திருயாத்திரையைத் தொடர்ந்து இவர் வெளியிட்ட நூல் ஒன்றில் பாலஸ்தீனத்திலுள்ள புனித தலங்கள் பற்றியெல்லாம் விபரித்துள்ளார். இந்நூலில் நாம் குறிப்பிடும் வனாந்தரப்பகுதியடங்கிய கிராமத்தின் பெயர் ராப்கா என்றும் அங்கு கிறிஸ்துவின் புதுமையை நினைவுறுத்த ஒரு பெரிய தேவாலயம் எழுப்பப்பட்டிருந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

1932-ம் ஆண்டில் புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவொன்று இப்பகுதியில் நடாத்திய பரிசோதனையில் 386-ல் ஈதுரியா விபரித்திருந்த தேவாலயத்தின் அத்திவாரப் பகுதிகள் அதே அளவுப்பிரமாணத்துக்கிணங்கக் கண்டுபிடிக்கப்படலாயின. அத்துடன் அழிவற்ற நிலையில் நான்காம் நூற்றாண்டுக்குரிய தான பலவண்ண ஓவியக்கல் வரிசைகளும் வெளிவரலாயின. (இன்றும் எந்தவித பழுதுமின்றி அவை காணப்படுகின்றன.)

இக்கற்கள் நான் முன்பு குறிப்பிட்ட தேவாலயத்தின் தளவரிசைக் கற்களாக இருந்திருக்கலாம். இவ்வாலயம் கட்டப்பட்ட காலத்தில் அல்லது அதற்குச் சற்றுமுன்பாகக்கிறிஸ்து வாழ்ந்தகாலத்தில் பாலஸ்தீனத்தில் காணப்பட்ட பட்சிசாலங்கள், விலங்குகள், மீனினங்கள் இத்தளவரிசைக்கற்களில் சிறப்புறப் பதிக்கப்பட்டுள்ளன.

இவைகளின்றிக் கிறிஸ்துவின் மிகப்பெரிய புதுமை என்னப்படும் அப்பங்களையும் மச்சங்களையும் பலுகப்பண்ணிய தலம் இதுதான் என்பதை நிரூபிக்கப் போதுமான சான்று ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது தேவாலய அமைப்பை ஆராய்ந்து கொண்டே செல்கையில் பிரதான பீடம் அமைந்த இடத்தில் மற்றொரு ஓவியக் கல் காணப்பட்டது. இக்கல்லில் அப்பக்கூடை ஒன்றும் இரு மச்சங்களும் அழகுற செதுக்கப்பட்டுள்ளன.

எனினும் மீண்டும் இப்பகுதி தேடுவாரற்ற நிலையில் காணப்பட்டது. இரண்டாவது உலகமகா யுத்தமும் [illegible] மகாயுத்தத்தின் பின்னுல், இஸ்ரயேல் என்றபுதுஇராச்சியம் உருவாக்கப்பட்டது பாலஸ்தீனம், இஸ்ராயேல் — ஜோர்டான் நாடுகளுக்கிடையே பங்கிடப்பட்டது. இந்நிலையில் கொலோன் அதிமேற்றிராசனம் நாம் குறிப்பிடும் இத்தலத்துக்கு உரிமை பாராட்டத் தொடங்கியது. அதன் உரிமையைத் திருச்சபையும் அங்கீகரித்தது. காரணம் 1932-ல் இத்தலம் தொல்பொருளாராய்ச்சியாளரால் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து கொலோன் அதிமேற்றிராசனம் இப்பகுதியை விலைக்குப் பெற்று அதன் நிர்வாகத்தை ஆசீர்வாதப்பர்சபைத் துறவிகட்கு கையளித் திருந்தமையேயாகும்.

1954-ல் ஆசீர்வாதப்பர் சபைத் துறவிகள் இங்கு குடியேறினர். ஒரு சிறு தேவாலயத்தைக் கட்டுவதற்காக அவர்கள் பழைய அத்திவாரப்பகுதிக்கு உள்ளாகத் தோண்டியபோது மற்றொரு சிறிய தேவாலயத்தின் அத்திவாரங்கள் தென்பட்டன. விவிலிய ஆராய்ச்சியாளர்கள் இச்சிற்றாலயம் கிறிஸ்துவின் மரணத்தைத் தொடர்ந்து அமைக்கப் பட்டிருக்கலாமெனக் கருதுகின்றனர். சத்திய திருச்சபையின் முதலாவது தேவாலயம் இதுவென வாதாடுவோரும் உண்டு.

இஸ்ராயேலுக்குரிய பகுதியில் அமைந்துள்ளது இந்த ராப்கா கிராமம். இக்கிராமத்துக்கு அண்மையில் கிறிஸ்துவின் பிரசித்திபெற்ற மலைப்பிரசங்கம் நிகழ்த்தப்பட்ட மலையடிவாரம் காணப்படுகிறது. அங்கு காணப்பட்ட தளவரிசைக் கற்களைப் பாதுகாப்பதற்கென 90 அடி நீளம் 45 அடி அகலத்தில் ஒரு தற்காலிக கட்டிட அமைக்கப்பட்டுள்ளது. பக்கத்தில் ஆசீர்வாதப்பர் சபையாரின் ஆச்சிரமம் காணப்படுகின்றது. ஆச்சிரமத் துறவிகள் அண்மையிலுள்ள காணிகளை விவசாயப் பண்ணைகளாக மாற்றியமைப்பதில் வெற்றியடைந்துள்ளனர்.

யாத்திரிகர்கள் ஒருகாலத்தில் கிறிஸ்துபெருமானின் பாதகமலங்கள்படப் பாத்திரமாகிய இப் புல்வெளியில் அமர்ந்து அப்பங்களையும் மச்சங்களையும் புசித்தவண்ணம் அன்றைய பெரும் புதுமையை நினைவுகொள்ளுகின்றனர். அவர்கட்கு முன்பாக கலிலேயாக் கடலின் அலைகள் சப்தமிடுகின்றன. இக்கடலை ஜெனசரேத் வாவி என்றும் தைபீரியஸ் வாவி என்றும் கூட அழைக்கின்றனர்.

ஒருபக்கமாகப் பிரமாண்டமாகக் கட்டப்படவிருக்கும் மகாதேவாலய அமைப்புகள். மறுபக்கத்தில் சிறுதொலைவில் கடலை அண்மியதாக மீனவரான புனித பேதுரு பெயராலமைந்த சிற்றாலயம். ஆம், அன்று நானே சீவிய அப்பம் என்றவர் அதை நிரூபிக்கச்செய்த அற்புதத்தை இன்றும் ராப்கா கிராமம் உலகனைத்துக்கும் பறைசாற்றிக்கொண்டிருக்கிறது.

(எல். பி. செகலியாஸ் எழுதிய திருப்பாடுகளின் திருத்தலங்கள் என்ற நூலில் இருந்து தொகுக்கப்பட்டது.)

---

## எங்கே சென்றாய்?

மகனேநீ ஏகும்வழி இருளென்றங்கே
மாணிக்க விளக்கேந்தி ஓடிவந்தேன்
"இவனாரென் பின்தொடரும் கொடியோன்" என்றாய்
இதயத்தில் வேல்பாய்ச்சி எங்கே சென்றாய்.

* * *

கண்மணியே! முள்ளடர்ந்த காட்டினூடே
காணமற் போய்விடுவாய் என்றேயேங்கிக்
கண்ணுறங்கா துனைத்தேடி அலைந்துவந்தேன்
கன்னத்தில் அறைந்தாயே எங்கேசென்றாய்?

* * *

வழிபறிப்பார்; வதைசெய்வார்; கொடியோருன்னை
வஞ்சிப்பார் "என்அன்பே! வாராய்" என்றேன்
பழிகாரன் நீயேயென் றுரக்கக்கூவிப்
பரிகாசம் செய்தாயே எங்கே சென்றாய்?

* * *

இகமீது பரசுகத்தின் இன்பங்காண
என்னிருகை நீட்டியுனை அணைக்கவந்தேன்.
மகனே! நீ செய்ததைப்பார் சிலுவைமீது
மனந்துடித்து நிற்கின்றேன் எங்கே சென்றாய்?

* * *

இன்னுயிரே! எனைப்பிரிந்தே ஏகிடாதே
ஏகாந்தப் பெருவெளியில் துடிப்பாயென்றேன்
என்னுயிரைக் கவர்ந்தாயே இரும்போநெஞ்சம்?
இன்னுமுனைத் தேடுகின்றேன் எங்கே சென்றாய்?

யாழ் — "ஜெயம்"

---

வேதாகமத்திலிருந்து திருவுரை

## நம்பிக்கை

நம்பிக்கையினுல் நாம் இரட்சிக்கப்பட்டோம்: நாங்கள் காணுதவற்றின்மேல் நம்பிக்கையாயிருந்தால், நாங்கள் பொறுமையுடன் காத்துக்கொண்டிருப்போம்.

அன்பார்ந்தவர்களே, இப்பொழுது நாங்கள் சருவேசுரனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்; நாம் இனிமேல் எப்படி இருப்போமென்று இன்னும் காணப்படவில்லை. அவர் வரும்போது, நாம் அவரைப்போல் இருப்போமென்று அறிவோம். ஏனெனில், அவர் இருப்பதைப்போன்றே அவரைக் காண்போம். இந்த நம்பிக்கை இருக்கும் ஒவ்வொருவரும் அவர் பரிசுத்தராயிருப்பதுபோலே தம்மையும் அர்ச்சிக்கின்றனர்.

அவரிலே வாசஞ்செய்யுங்கள். அவர் வரும்போது அவரில் நம்பிக்கையுடையவராயும் அவரால் தள்ளப்படாதவராயும் இருப்போம்.

நாம் ஏற்றுக்கொள்ளும் நம்பிக்கையில் தளராதவர்களாயும் உறுதியுடையவர்களாயும் இருப்போம். ஏனெனில் வாக்குறுதியைக் கொடுத்தவர் விசுவாசமுள்ளவர்.

இந்த வாக்குறுதியையே அவர் எங்களுக்குத் தந்திருக்கிறார்; முடிவில்லா வாழ்க்கை.

கடவுள் தம்மை நேசிப்பவர்க்கு எதை ஆயத்தம் செய்வாரென்று கண்களும் காணவில்லை. காதுகளும் கேட்கவில்லை. மனிதனின் இதயத்திலும் அது செல்லவில்லை.

பாவிகளுக்கு வரும் தண்டனையோ சொல்லுந்தரமன்று. ஆனுல், கடவுளில் நம்பிக்கை வைப்பவர்களை இரக்கம் சூழ்ந்துகொள்ளும்.

கண்களை மோட்சத்தைநோக்கி எழுப்புங்கள். பின் உலகத்தை நோக்கிக் கீழே பாருங்கள். ஏனெனில், ஆகாயம் புகையைப்போலவும், பூமி உடையைப்போல் கிழிந்துபோகவும் அதில் வசிப்பவர்கள் அதேபோல் அழிந்தும் போவார்கள். ஆனுல், என்னுடைய இரக்கம் என்றுமே நீடித்திருக்கும், எனது நீதி ஒருபோதும் குறையாது.

இப்போது நம்பிக்கையின் கடவுள், விசுவாசத்தில் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் நிரப்புவாராக. நீங்கள் நம்பிக்கையிலும், பரிசுத்த ஆவியின் கொடைகளிலும் நிரம்பி வழியும்படியாக, ஆமென்.

ஒசேர்வாத்தோ ரோமானோவிலிருந்து.

தமிழில் தருபவர்: பாக்கியம்.

---

### உடையும் வாசனையும்

வாசனைப் பொடிகள், சந்தனம் பூசுவது உடலுக்கு நலம். ஆடம்பரமல்ல. இதனுல் கபம், கொழுப்பு, முதலியவை கரைந்து விடுகின்றன. நல்ல உடைகளை உடுப்பது கூட ஆடம்பரமல்ல. உடல் நலனுக்கு இன்றியமையாதது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பூர்வீக கிறீஸ்தவர்கள்

எழுதியவர்: மறைத்திரு. சைமன் கிறகோரி பெரேரா, யே. ச.
தமிழில் தருபவர்: நெடுந்தீவு, ம. மரியதாசன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

"இந்தியாவுக்கு அப்பால் இந்துசமுத்திரத்திலுள்ள தப்ரபேன் என்ற தீவிலும் ஒரு கிறீஸ்தவ தேவாலயம் இருக்கிறது. அங்கு குருவானவரொருவரும், குறிப்பிடக்கூடிய அளவு விசுவாசிகளும் இருக்கின்றனர். இந்தியர்கள் இதனைச் 'சிலிடிப்பா' என அழைக்கின்றனர். கிரேக்கர்கள் 'தப்ரபேன்' என அழைக்கின்றனர்" என்று கொஸ்மாஸ் கூறுகின்றபடியினால், தப்ரபேன் என்பது இலங்கையையே குறிக்கிறதென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. 'வந்தேறு குடிகளாகிய பார்சியக் கிறீஸ்தவர்கள் இங்கு வசிக்கின்றனர். குருவானவராக நியமிக்கப் பட்டிருப்பவரும், திருமறைச் சடங்குகளை நிறைவேற்றும் தியாக்கோனாக நியமிக்கப்பட்டிருப்பவரும் பார்சியதேசத்தவர்களே யாவார்கள். ஆனால் இங்குள்ள சுதேசிகளும் அவர்களது அரசர்களும் அஞ்ஞானிகளாக இருக்கின்றனர்'' என திரு. கொஸ்மாஸ் அவர்களின் பதினோராவது புத்தகத்தில் வர்ணிக்கப் பட்டிருக்கிறது.

கிறீஸ்தவ சமுதாயத்தைப் பற்றிக் குறிப்பிடும் ஒரேயொரு எழுத்தாளர் திரு. கொஸ்மாஸேயாவார். எனவே, இவரது கூற்று வரலாற்று ஆசிரியர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. இவருக்குச் சிறிது காலத்திற்கு முன்னர் திரு. மார் யோனன் என்பவர் வாழ்ந்திருக்கிறார். மார் யோனனுடைய காலத்தில் வாழ்ந்தவரான சேடேயி என்னும் பார்சியச் சரித்திராசிரியர் பின்வருமாறு எழுதுகிறார். "இந்தியாவிலுள்ள புனித தோமையாரின் சந்நியாச மடத்தின் ஏகதலைவரும் குருவுமாகவிருந்தவரின் கேந்திரஸ்தானம் கறுப்பர்வாழும் இலங்கைத் தீவிலிருந்தது. திரு. கொஸ்டாவிடமிருந்துதான் பார்சியக்கிறீஸ்தவர்களைப்பற்றிய முழுத்தகவல்களையும் அறிந்துகொள்கிறோம். பார்சியக் கிறீஸ்தவர்களின்மத்தியில் பணியாற்றிய ஞானமேய்ப்பர்களும் அந்நாட்டைச் சேர்ந்தவர்களென்பது இவரது கூற்றிலிருந்து தெரியவருகிறது. 5ஆம் நூற்றாண்டினிறுதியில் நெஸ்ரோறியன் திருச்சபையினரின் தப்பறைக்கொள்கைகளைப் பார்சிய திருச்சபையினரும் பின்பற்றத் தொடங்கியபடியினால் இலங்கைக்கிறீஸ்தவர்களும் அநேகமாக நெஸ்ரோறியன் திருச்சபையைச் சேர்ந்தவைகளாயிருந்திருப்பர். பார்சியக் கிறீஸ்தவர்கள் தாங்கள் சென்ற இடமெல்லாம் தங்களது மதத்தையும் கொண்டு சென்றனரென்பதற்குச் சான்றுபகர்கின்றகல்வெட்டுகள் இன்றுமிருக்கின்றன. சீனதேசத்திற்கு முதன்முதலாக யேசுவின் நாமத்தைக் கொண்டுசென்றவர்கள் இவர்களேயாவார்கள். 6-ம் நூற்றாண்டில் பார்சியர்கள் இலங்கையோடு வர்த்தகத்தொடர்பு வைத்திருந்தனரென்பது யாவரும் அறிந்ததோர் விடயமாகும்.

பிறதேசத்தவர்கள் விடயத்தில் சிங்கள வரலாற்றேடுகள் பெருமளவில் மௌனம் சாதிக்கிறபடியினால், தகவல்களை அறிவதற்காக இவைகளைத் துருவி ஆராய்ந்தால் அது விழலுக்கிறைத்த நீராகவே முடியும். எனினும், பந்துகாபயன் என்னும் மன்னன் "அனுராதபுரத்தின் மேற்கு வாசலருகே நிறுவியவற்றுள் சோனகர்களுக்கென ஒதுக்கப்பட்ட ஓரிடமுமிருந்ததாக'' மகாவம்சம குறிப்பிடுகிறது. இவ்வாக்கியம் தற்கால நிலைக்குப் பொருத்தமற்றதாகக் காணப்பட்டபோதிலும் இப்படிப்பட்ட பிறதேசத்தவர்கள் கிறிஸ்தவர்களாகவிருக்கக் கூடுமெனவும் கருதலாம். 'தியாக்கோனுடன் குருவும்' என்று குறிப்பிடுகையில் வழிபாடு செய்வோரனேகரிருந்தனரெனவும் பொருள் கொள்ளலாம். இலங்கையிலிருந்த பார்சிய வர்த்தகர்கள் வியாபார ஸ்தானமாக விளங்கும் ஓரிடத்திலொன்றுகூடி வாழ்ந்திருக்கக் கூடுமாதலால், அக்காலத்தில் அனுராதபுரம் அப்படிப்பட்ட ஸ்தானமாயிருந்திருக்கிறது. எனவே, இக்நகரத்தில் அந்நியரைக் காண்பதில் எவ்வித ஆச்சரியமுமில்லை.

1912-ம் ஆண்டு புதைபொருளாராய்ச்சி இலாகாவினர் அனுராதபுரத்தைத் தோண்டி அகழ்வாராய்ச்சி செய்கையில் பார்சிய நாட்டைச் சேர்ந்த சிலுவையொன்றைக் கண்டு பிடித்தனர். அனுராதபுரத்தில் கிறிஸ்தவர்களிருந்தனரென்பதற்கு இச்சிலுவை போதிய சான்றாக விளங்குகிறது. உட்குழிவான சிலுவை பதிக்கப்பட்ட சமாந்தரமான கருங்கல்லொன்று அனுராதபுர அரணருகே தோண்டியெடுக்கப் பட்டிருக்கிறது அயலிலுள்ள அழிந்த சில கிறீஸ்தவ கட்டிடங்களிலொன்றுக்கு இக்கல் அத்திவாரக்கல்லாகப் பாவிக்கப்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகிறது. மலபார் மாகாண 'சிரிய' திருச்சபைக் கோவில்களிலுள்ள சிலுவைகளைப் போலவே இச்சிலுவையுமிருக்கின்றபடியினால், இது பார்சிய நாட்டைச் சேர்ந்ததென நிச்சயமாகச் சொல்லலாம். புனித தோமையாரின் சிலுவையெனப் போர்த்துக்கீசரால் அழைக்கப்பட்ட சிலுவையொன்று களனிநதியையடுத்த கொழும்பு முகத்துவாரப்பகுதியில் போர்த்துக்கீசர் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. களனிப் பள்ளத்தாக்கிலுள்ள துறைமுகமாகவும், கொழும்புப் பிரிவின் நகர்ப்பகுதியாகவும் பார்சியரைப் பின்தொடர்ந்துவந்த சோனகர்களின் பண்டமாற்றுச் சந்தையாகவும் களனி விளங்கிவந்திருக்கிறது. எனவே, முகத்துவாரத்தில் கண்டெடுக்கப்பட்ட சிலுவை பார்சிய வர்த்தகர்கள் நமது நாட்டில் வாழ்ந்திருக்கின்றனரென்பதை ஞாபகப் படுத்துகின்றது.

பார்சிய கிறீஸ்தவர்களின் கதி என்னவாயிற்றென்பது பற்றி எமக்கு எதுவுமே தெரியவராது. 13-ம் நூற்றாண்டின் பின்னர் கீழைத்தேயத்தில் நெஸ்ரோறியன் திருச்சபையினர் அழிந்தொழிந்து போனதாக அறிகிறோம். 14-ம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த மரித்நொல்லி என்பவரும், ஏனைய குருக்களும் இலங்கையில் இப்படிப்பட்ட கிறீஸ்தவர்களிருந்ததாகக் குறிப்பிடவில்லை. நெடுங்காலத்திற்கு முன்னர் பார்சிய திருச்சபையினர் அழிந்தொழிந்து போயினரானபடியினால் அநேகமாக அவர்களைப்பற்றி எவருமே கூறியிருக்க மாட்டார்கள். "நெஸ்ரோறியன் மிஷனரிகளால் நிறுவப்பட்ட தேவாலயங்களின் நினைவுச் சின்னங்களைக் காண முடியாது. நினைவுச்சின்னங்களைக் காண்பதாகவிருந்தால், அவைகள் போர்த்துக்கீசரால் கட்டப்பட்ட ஆலயங்களின் சிதைவுகளாகவே இருக்கும்'' எனத் திரு. கோடினர் அவர்கள் தனது 'இலங்கை வர்ணனை' என்ற புத்தகத்தில் துணிந்து கூறுகிறார். பார்சிய கிறீஸ்தவர்களையும், அவர்களது குருவையும், தியாக்கோனையும் மாத்திரமே குறிப்பிட்டு, நெஸ்ரோறியன் திருச்சபையினர் இலங்கையில் வேதவிசுவாசத்தை நிலைநாட்டினரென்றபேச்சுக்கே இடம்வைக்காது திரு. கொஸ்மாஸ் அவர்கள் கொடுத்த விபரங்களுக்குத் திரு. கோடினர் அவாகள் மேற்கொண்டும் விளக்கம் கொடுத்திருக்கிறார். இக் கருத்துக்களையெல்லாம் பிற்கால எழுத்தாளர்கள் பொழுதுபோக்குச் சம்பவங்களாக மாற்றிவிட்டனர். திரு. கௌ அவர்கள் கோடினரின் கருத்தைக் கையாண்ட விடயத்தில் இந்நிலைமை ஏற்பட்டிருக்கிறது. "பார்சிய நாட்டிலிருந்து வந்த நெஸ்ரோறியன் திருச்சபையினர் கட்டிய கிறீஸ்தவ தேவாலயங்களின் சிதைவுகள் ஒல்லாந்தரது படையெடுப்பின் போது காணப்படவில்லை. போர்த்துக்கீசர் இலங்கையின் கடற்பிரதேசங்களைக் கைப்பற்றியதும் இங்குள்ள சுதேசிகளின் வழிபாட்டு ஸ்தலங்களையெல்லாம் தரைமட்டமாக்கினர். பௌத்த கோவில்களுக்கேற்பட்ட கதிதான் நெஸ்ரோறியன் திருச்சபையினரது கோவில்களுக்கும் ஏற்பட்டதென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அவர்கள் இந்த ஆலயங்களையெல்லாம் இடித்து இவற்றிலுள்ள பொருட்களைக் கொண்டு கடற்கரைப் பகுதிகளில் தமது சொந்தத் தேவாலயங்களை நிறுவினர். இவ்வாறு திரு. கௌ அவர்கள் திரு. கோடினரின் மூலக்கருத்துக்களைக் கையாண்டு தர்க்கரீதியாக எழுதியுள்ளார்.

இலங்கைக்கிறீஸ்தவர்களைப் பற்றிய கர்ணபரம்பரைக் கதைகளில் பகுத்தறிவிற்கு அப்பாற்பட்ட விடயங்கள் பொதிந்து கிடக்கின்றன. 6-ம் நூற்றாண்டில் பார்சிய கிறீஸ்தவ தேவாலயமொன்று இலங்கையில் இருந்ததென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால், லோறென்சோ டி அல்மெய்டா என்பவர் 1505-ம் ஆண்டு காலித் துறைமுகத்தில் கால் வைக்கும் வரைக்கும் கிறீஸ்தவர்களோ, அன்றேல் கிறீஸ்தவ கர்ணபரம்பரைக் கதைகளோ இலங்கையில் இருக்கவில்லை. ஒருவருக்கொருவர் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்களான திரு. எமர்சன் ரெனன்ற், திரு. கோட்டினே ஆகிய இரண்டு எழுத்தாளர்களும் 'இலங்கைக் கிறீஸ்தவர்களைப்பற்றித் தனித்தனியே புத்தகங்கள் எழுதியிருக்கின்றனர். புரொட்டஸ்தாந்த மதத்தினரான திரு. ரெனன்ற் அவர்கள் சிலகாலத்திற்குமுன்னர் குடியேற்றநாட்டுக் காரியதரிசியாக இலங்கையில் கடமையாற்றியிருக்கிறார். இவர் கற்பனைசக்தியைக் கொண்டு தனது கருத்துக்களை எடுத்தாண்டிருக்கிறார். ஆனால், கத்தோலிக்கரான திரு. கோட்டினே அவர்கள் பல்வேறு இடங்களிலிருந்து சேகரித்த ஏராளமான தகவல்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு பாரபட்சமற்றதும், சரித்திர சர்ச்சைக்கு அப்பாற்பட்டதுமான தனது புத்தகத்தை எழுதியிருக்கிறார். (முற்றும்)

# அன்னையின் கல்யாண மோதிரம்

புனித பத்தாம்பத்திநாத பாப்பானவர் ஒருவறிய, எளிமையான, ஆனால், தேவ பக்தியிலும், வேதானுசாரத்திலும் அதிகம் சிறந்து, எவருக்குமே ஓர் எடுத்துக்காட்டாக விளங்கிய ஒரு உத்தம கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்தவர். இந்த எதிர்காலப் பாப்பானவர் முந்த ஒரு விசாரணைப்பங்கின் துணைக்குருவாயும், பிந்த ஒரு சிறிய பங்கின் விசாரணைக்குருவாயும் பணியாற்றிவந்தார், அதன்மேல் ஒரு நாள் ஒரு மேற்றிராணியாராக நியமனம் செய்யப் பெற்றார்.

அப்பொழுது அவர் தமக்கு அருளப்பட்ட புதிய ஆயர் பதவிக்குரிய அதிகார மோதிரத்தையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைந்தவராய்த் தம்முடைய அருமைத்தாயாரும் பார்த்து வியப்பும், மகிழ்வும் எய்தும்படியாய் அவரிடம் அதைக் கொடுத்தார்.

அவர் கரத்திலிருந்து அதனை வாங்கிய அவருடைய தாயார் மாதாவுக்குரிய இயல்பான பெருமையுடன் தனது அன்புப் புதல்வரைப் பரிவுடன் விழித்து, புன்முறுவல் காட்டினார். பின்னர் திருமறையிலே அவரின் புதிய பதவிக்குரிய அதிகார சின்னமாகிய திருமோதிரத்தைத் தனது கையில் ஏந்திக் கொண்டு, மெலிவடைந்து போன தன்னுடைய கரத்திலிருந்த அலங்காரமற்ற, சாதாரண மோதிரத்தை அவருக்குக்காட்டி, 'மகனே, உம்முடைய மோதிரம் அலங்காரமிக்கதும், அதிகம் விலைபெற்றதுமாய் இருக்கிறது; ஆனால், என் மோதிரத்தை நான் பெற்றிராதிருந்தால் உம்முடைய மோதிரத்தை நீர் ஒருபோதுமே பெற்றிருக்கமாட்டீர்'' என்றார்.

இங்கே நாம் ஆராய்ந்து சிந்திப்பதற்கான ஒரு நல்ல சிந்தனை இருக்கிறது. நல்ல தாய்மார் இல்லாது உலகில் நல்ல ஆண்மக்களையும், நல்ல பெண்மக்களையும் நாம் கொண்டிருக்க முடியாது. இன்னும் விளக்கமாகச் சொல்லுகிறதானால் நம்திருமறையிலே நல்லகுருமாரையோ அன்றேல் நல்ல சந்நியாசர், கன்னியாஸ்திரிமாரையோ நாம் கொண்டிருக்க முடியாது.

ஒருநல்லதாயின் சீரிய வாழ்க்கை அவளுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பெரும் அளவிலே உருவாக்குகின்றது. அவள் தனது இல்லத்தில் கருணையோடும், பொறுமையோடும் செய்துவரும் கருமங்களும், சமயவழிபாடுகளும் செபதவதான தருமங்களும், வாசித்தும், வாசிக்கக்கொடுத்தும், வருகின்ற நல்லபத்திரிகைகள், புத்தகங்களும், மதிப்புக்கொடுத்து அனுசரித்து வரும் பத்துக்கற்பனைகளும், உற்சாகமூட்டும் பிறர்சிநேகக் கிரியைகளும், மற்றும் செய்காரியங்களும் ஒரு குழந்தையின் உள்ளத்திலே நல்வாழ்க்கைக்கு வித்திடுகின்றன.


அத்தகைய ஓர் இல்லத்திலிருந்து உதிக்கும் பிள்ளைகள் நல்ல ஆடவர்களாகவும், பெண்மணிகளாகவும் வளருகின்றார்கள். இல்லறத்தை நல்லறமாகக்கொண்டு இல்வாழ்க்கை நடாத்தும் இல்லத்தரசிகளாலேயே நம்திருமறைவாழ்க்கை வளம்பெற்றுச் சிறப்புற்றுத் திகழ்கின்றது. அவர்களுடைய இல்லங்களிலேயே துறவறத்தினரான உத்தம குருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரிமார் உருவாகின்றனர். ஆம் தேவஅழைத்தலின் வித்து அவற்றிலேயே விதைக்கப் படுகின்றது. தேவபக்தியுள்ள ஒரு நல்லதாயின் கல்யாணமோதிரம் கடவுளுடைய திருமறைக்குத் தேவ அழைத்தல்களின் ஊற்றும், ஊருணியுமாய் இருக்கிறது.

பல்வேறு நாடுகளிலும், ஒவ்வொரு மாதங்கள், சிறப்பாகப் பங்குனிமாதம் தேவ அழைத்தலின் மாதமாக அனுசரிக்கப்படுகிறது; ஆகவே, பெற்றோர் தமது குடும்பத்தில் தேவ அழைத்தலுக்காய்ச் சிறப்பாக மன்றாடிவர இந்தமாதத்தை ஒரு நல்ல சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்தல் நலமாகும், பெற்றோரே உங்கள் கல்யாண மோதிரம் உங்கள் குடும்பத்தில் ஒரு குருவையோ, அன்றேல் சந்நியாசர், கன்னியாஸ்திரியையோ

[மறுபக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களங்கம்



## (விமர்சனக் கண்ணோட்டம்)

திருமறைக்கலாமன்றம் பெருமையுடன் அளித்த ஓர் உன்னத படைப்பு — திருப்பாடுகளின் நற்சிந்தனை— நாடக இசைச்சித்திரம் களங்கம்.

அது, யாழ். ஆசனக்கோவில் நாடக அரங்கில் கடந்த மாசித்திங்கள் 22ஆம் நாள் அரங்கேற்றப்பட்டது.

வாழ்வினைத்தந்த வன்சிலுவை அன்று வள்ளல் யேசுவின் வரலாற்றை வாய் மலர்ந்து கூறியது. பாவிகளைத்தேடிவந்த கால்பதைக்க, ஆசீர்அளித்தகரங்கள்தவிக்க, மாமரிக்கன்னி மனம்குமுறித் துடிக்க, கல்வாரியின் கோரக் காட்சியைக் கண்டு மக்கள் குழாம் கண்ணீர் வடிக்க, "திருப்பாடுகள்" இதயங்களில் நிலைக்கக் கலாமன்றத்தினர் தமது அரிய நடிப்பால் கலைப்பணியாற்றினர்.

திருத்துகிலுரிந்து, செந்நீர் ஆறாய்ப்பெருகக் கசையடிபட்டு முள்ளின் கொடுமுடி புனையப்பட்டு நீள்சிலுவை தாங்கி யேசுபரன் நெடுவழி நடந்து, பலிக்களத்தில் செம்மறிப்புருவைபோல் உயிர் துறந்த சோகத்தை மக்கள் மனதில் ஆழமாய்ப் பதியும் வண்ணம் ஒளியும் நிழலும் ஒலியும் கலந்து உருவாக்கித் தந்த கலாமன்றத்தினரின் பெருமை பாராட்டத்தக்கது.

திரைப்படமும், நாடகமும், வானொலி நிகழ்ச்சிகளும் பல்கிப் பெருகிப் பரவிவரும் இந்நாள்களில் தமக்கென ஒரு புதியகலைவழியைப்பின்பற்றி; 'திருப்பாடுகளை' நாடக இசை ஓவியமாகத் தந்தார் வண. பிதா. நீ. மரியசேவியர் அவர்கள்.

உள்ளத்தை உருக்கும் வசனங்கள்; கண்களில் நீர் பெருக்கும் கவிமணிகள்; நெஞ்சைப் பிழந்தெடுக்கும் உருக்கமான நடிப்பு; இதயத்தைக் கனிய வைக்கும் இசையமைப்பு; இத்தனையும் அமைந்துதான் களங்கம். கத்தோலிக்க உலகுமுழுதும் கண்டு தேவகுமாரனின் பாடுகளைத் தியானிக்கத்தக்கதாய் கலாமன்றத்தினர் பலதிசைகளிலும் இந் நாடகத்தை அரங்கேற்றக் கலையுலகு கைதரவேண்டுமென்று விழைகின்றோம்.

கலைமன்றத்தினர் அனைவர்க்கும், நடிகர்திலகங்களுக்கும், இசையமைப்பாளர்க்கும், பின்னணிக் கலைஞர்க்கும், ஒலி, ஒளி உதவினவர்க்கும், இயக்குநர்க்கும் எம் நன்றியைத் தெரிவிக்கின்றோம். திருமறைக் கலாமன்றம் வளர்பிறையென வளர்ந்து இன்னும் பல உன்னத படைப்புக்களையளிக்கவேண்டுமென மனமார வாழ்த்துகின்றோம்,

— மறை வேந்து

* * *

கல்வாரி மலைக் குன்றில், கடவுள் மகன் கொலையைப் புரிந்த களங்கம் யாருடையது? அன்று வாழ்ந்த அற்பர்களுடையது — பகைமை கொண்ட பரிசேயருடையது — கயமை நிறைந்த கள்ள ஞானிகளுடையது என்று தான் நாம் கூறுவோம். ஆனல் உண்மை புரியவைத்தது களங்கம். ஆம், 'களங்கம்' எம் கண்களைக் கலங்க வைத்தது; புத்தியைத் துலங்கவைத்தது; அருள் ஒளியை இலங்க வைத்தது. கண்டவர் மனத்திற் கலைந்திடாக் காட்சியாய்ப் பதிந்துவிட்டது. கற்பனையுலகுக்கு இட்டுச்சென்றதென்று கூறினும், சிறப்பாக இதயத்தின் அந்தரங்கக் கோட்டையின் கதவுகளை, அகலத் திறந்து அங்குதான் இட்டுச்சென்றதென்றே கூற வேண்டும். இசை நிறைவுடன் நடந்த நிகழ்ச்சிகள் இதயங்களை இளகச்செய்தன.

அதனை அரும் பாடுபட்டு ஆக்கி அமைத்துக்கொடுத்த திருமறைக் கலாமன்றத்தினரின் பெருமுயற்சி மிகவும் வியக்கத்தக்கது. கற்பனை என்றாலும், கண்ணியம்விளங்கியது. கர்நாடக இசையின் கனிவு துலங்கியது இது போன்ற நிகழ்ச்சிகள் எம் சமுதாயத்திற்கு மிகுந்த பயனளிக்குமென்பதில ஐயமில்லை.

— சிஸ். எம். பி.

* * *

எங்கும் கலை — எதிலும் கலை. ஏன்? இந்த 20-ம் நூற்றூண்டே கலையின் நூற்றூண்டெனப் பெயரும் பெற்றுவிட்டது. கூத்தென்றும் கும்மியென்றும், நாட்டியமென்றும் பாடகமென்றும், பாட்டென்றும் யாடலென்றும் கலையே பலவிதம். நம் பெருமறையாம் திருமறையே அகிலம் எங்கும் புகழ்ஓங்கும் வகையில் புதிய பல மாற்றங்களுடன் புதுத்தோற்றமளிக்கிறது. திருமறையைப்பரப்பச் சமூகத்தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்த அன்பின்வேண்டுகோள் விடுத்தது வத்திக்கான் சங்கம்.

தலைப்பைக் கண்டதும் கண்டனக் கட்டுரை என்று கதிகலங்காதீர். "களங்கம்" பற்றிய ஒரு கண்ணோட்டம் என்று விளங்க வைக்கிறேன். திக்கெட்டும் புகழ்கொட்டும் திருமறைக் கலாமன்றம் திரட்டித்தந்த தீந்தமிழ்ச் சித்திரம் களங்கம். இதைத் தான் தவக்காலத்தில் கலைக் கோலத்தில் திருப்பாடுகளின் சிந்தனையை நாடக இசைச் சித்திரமூலம் அனைவர் மனதிலும் தூண்டிவிட்டனர் கலாமன்றத்தினர்.

புதிய பாணியிலே, புரியவைக்கும் மொழியிலே கற்பனை ரூபத்தில் ஓர் அற்புத படைப்பை அளித்து இசை மாரி பொழிந்து அசையாத புகழை நாட்டிவிட்டனர் களங்கத்தில் கலந்தவர்கள் அனைவரும் என்பதை அறிவுறுத்தி அருமையான படையலைப்படைத்து அளித்த கலாமன்ற நிர்வாகிகளுக்குக் காவலன் சார்பில் எமது நன்றிகளைத்தெரிவிக்கிறோம். இன்னும அருகமர்ந்து இன்னிசைக் கருவிகளையிட்டிய கலைஞர்களுக்கும் மறை பாடகர் குழுவினர்க்கும் அனைவர் சார்பிலும் எமது நன்றிகள். எதிர்காலத்திலும் புதிய பல படைப்புகளைத் திருமறைக் கலாமன்றம் எம்திருமறைக்கு அளித்து அதன்மூலம் ஒரு மறையாய் மக்கள் வாழத் திரு அருள் வேண்டுவோம். கலைவளர்க்கும் கலாமன்றம் மலைபோல் வளர்க!

— இ. பேர்னுட்

## தவறிய பாதையிலிருந்து நேர்வழிப்படுத்துவது

# நோன்பு ஒன்றுதான்

யோர்தான் நதியிலே அருளப்பர் கரங்களால் ஞானத்தீட்சை பெற்றுக்கொண்ட யேசுநாதர் தன் பயணத்தை வனாந்தரத்திற்குத் திருப்பியதுடன அங்கு தமது நாற்பது நாள் தபசினை-உபவாசத்தினை மேற்கொண்டார். வெற்றி கண்டார். இக்கட்டத்தை நினைவுறுத்துவதும தபசின அவசியத்தினை வலியுறுத்துவதும் கத்தோலிக்க திருச்சபையில வருடந்தோறும் நடைமுறையில இருந்து வரும் "சதுரிகைகாலம்" என அழைக்கப்பெறும் நாற்பது நாட் தபசுகாலமாகும்.

இந்த நோன்பு காலம் இம்முறையும் விபூதிப்புதனிலிருந்து ஆரம்பமாகி விட்டது. இதன இறுதித்தினம் பெரிய சனிவரை நீடிக்கும். காலத்தின் விரைவில் கத்தோலிக்க திருச்சபை அதன ஆரம்பத்திலிருந்து அமுலிலிருந்துவந்த பல சட்டங்களை — அவசிய சட்டங்களைக்கூடத் தற்காலங்களில் தளர்த்திவிட்டும வருங்காலத்தில் நீக்கிவிடவும் முயற்சி எடுத்து வருவதை நாம் அறிவோம. குறிப்பாகத் திருச்சபை கடுமையான சட்டங்களைத் தளர்த்திவருவது திருச்சபையின் நன்மை கருதியோ, அன்றேல் திருச்சபையின் தலைமைப் பாப்பரசரின் விருப்பம் கருதியோ, மற்றும் கருதினல்மார், மேற்றிராணிமார், குருமார், துறவிகள் எனப்படுகிற வர் நலன் கருதியோ அல்ல. மக்களுடைய வாழ்க்கையையும், வசதியையும் முன்வைத்துத்தான் திருச்சபை கடுமையான சட்டங்களை நீக்கிவிடுகின்றது என்பதை உறுதியுடன் நாம் அறிவோம். எதிர்காலத்திலும்கூட திருச்சபை அமைத்திருக்கும் இரண்டாம் வத்திக்கான் பொதுமன்றம திருச்சபையில் நடைமுறையில் இருந்துவரும் சட்டங்கள் பலவற்றில் மாற்றம் பல கொண்டுவரக்கூடும். இதனையிட்டும் மக்கள் மன ஐயம் கொள்ள அவசியமில்லை. மக்கள் வசதிக்கே என்ற முழு நம்பிக்கையுடன், மனதிருப்தியுடன் உடனுக்குடன் அவற்றை ஏற்று ஆதரிக்க வேண்டும்; ஆமோதிக்க வேண்டும். அதன்பின் மாற்றம்பெற்ற சட்டம் மக்கள் வாழ்க்கையில் எதிர்பார்த்ததற்கு மேலான நன்மைகளை — பயன்களை அளித்திருக்கின்றது என்பதைக் காலத்தின விரைவில் மக்களே உணர்ந்து கொள்வார்கள்.

இதைவிடுத்துப் புதிய திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்ததுமே அவற்றைக் கேலிக்குரியதாக வீண வாதங்களுக்கு உள்ளாக்குவதும், புதிய திட்டங்களை அமுல் செய்யும் குருமார் மற்றும துறவறச் சபையினரை எள்ளி நகையாடுவதும கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு அழகல்லவே. இறைவனுக்கும், திருச்சபைக்கும் கீழ்ப்படியும் மனப்போக்குத்தான் உன்னத இலட்சிய

### செல்வி காமல் இக்னேஷியஸ்

மாகும. உலகம மாறிவருவதில மனத்திருபதியடையும் நாம மாற்றம பெறும் திருச்சபைச் சட்டங்களில ஏன மனத்திருப்தி கொள்ளக் கூடாது? தபசுகாலத்தைக் கூறவந்த இடத்தில் திருச்சபைச் சட்டங்களையும் வலியுறுத்த வேண்டிய அவசியம ஏற்பட்டுவிட்டதே.

பழமைகாலத்தில் கிறிஸ்தவர்கள தபசுகாலத்தினை மிகக் கண்டிப்பாக அனுசரித்து வந்தார்கள் என்று அறிகின்றோம். திருச்சபையில் அந்நாட்களில கடுமையான ஒழுங்குகள் இருந்தது உண்மை. அவற்றையெல்லாம் அன்றைய கிறிஸ்தவமக்கள் மன அமைதியுடன ஏற்று நடந்தார்கள். தபசு கால நாற்பது நாட்களும் மாமிசம், மதுபானம் இவற்றை முற்றாக நீக்கியதுடன காலையிலிருந்து மாலைவரை உணவு உட்கொள்ளாமலும், தாக சாந்தி செய்யாமலும் உபவாசமாக—விரதமாக இருந்து இரவில்தான சிறிது உணவும வீரும் அருந்தினார்கள் எனினும் பழமைக்காலத்தை விட இக்காலம் நவநாகரீகத்தில் மூழ்கியிருக்கும் உலகில் குற்றங்கள் மலிவடைந்து அதற்கேற்ற சந்தர்ப்ப சூழ்நிலைகளும் விரிவடைந்துள்ளன. அழிந்து போகும் நிலையற்ற சுகத்திற்கு இன்று பெருமதிப்பு அளிக்கப்படுகின்றது. இருந்தபோதிலும தபசு செய்ய வேண்டிய கடமை—தமது மனச்சாட்சிக்கு எதிராக இழைத்துவிட்ட குற்றங்களுக்குப் பரிகாரம் பண்ணவேண்டிய அவசியம—உள்ளத்துடன் உடலையும் வருத்தி ஒருதலைப் படுத்தும் நோன்பு அனுஷ்டிக்கும் பொறுப்பு — இக்காலத்தில் மிகமிக அவசியமாகின்றது.

எனினும் பழமைக் காலத்தைப்போன்று விசுவாசிகள் கண்டிப்பான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டுமென்று இன்றைய திருச்சபை வலியுறுத்துவதில்லை. "தபசு செய்யாவிடில், விரதம் அனுட்டிக்காவிடில் நீங்கள் எல்லோரும் அழிந்துபோவீர்கள்" என்று இறைவன கூறிய வாக்கினுக்கு முனைபெிடத் தற்போது அதிக கவனத்திற்கு இடமுண்டு. எனவே திருச்சபையின் தளர்த்தப் பட்டுள்ள தற்காலத் தபசுகாலக் கடமைகளை அனுசரிப்பதுடன் நின்றுவிடாது நாமே பலவகையில் தபசுசெய்ய முயற்சி எடுக்க வேண்டும். ஒவ்வொரு கிறீஸ்தவரும், ஞானத்தீட்சை பெற்ற

(தொடர்ச்சி 2-ம் பக்கம்

---

**எதிர்பாருங்கள் :**

திருமறைக் கலாமன்றத்தினர் அளிக்கும்

**''கடவுள் வடித்த கண்ணீர்''**

என்னும் இசை-உரை நாடகச் சித்திரம்

(திருப்பாடுகளின் காட்சிகள்)

இடம்: **புனித மிக்கேல் ஆலயமுன்றல்,** உரும்பராய்.

நாள் : **22-3-70 குருத்தோலை ஞாயிறு.**

---

## அன்னையின் ...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

பிறப்பிக்கும் சின்னமாய் மிளிர்வதாக! இச்சந்தர்ப்பத்திலே எமது மேற்றிராசனத்தில் தேவ அழைத்தலுக்காகச் சொல்லப்பட்டு வரும உருக்கமான செபத்தையும் ஈண்டுதருகின்றோம்.

''தமது வேளாண்மைக்கு வேலையாட்களை அனுப்புமபடி வேளாண்மையின் எசமானை மன்ருடுங்கள் என்று எங்களுக்குப் படிப்பித்தருளிய திவ்வியயேசுவே! தங்கள் திரு ஊழியத்தினுல் ஆத்துமாக்களுக்கு இரட்சணியத்தையும், உமது பிதாவுக்கு மகிமையையும் கொண்டுவரக்கூடிய அநேக பரிசுத்த குருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரிமாரை உமது திருச்சபையிலும், விசேஷமாய் எங்கள் மேற்றிராசனத்திலும் பிறப்பித்தருள அனுக்கிரகஞ் செய்ய வேண்டுமென்று தேவரீரை இரந்துமன்ருடுகின்றோம்.

''ஆண்டவரே, இப்போது உமக்கு முன்பாக முழந்தாட்படியிட்டிருக்கும் எங்கள் மத்தியிலுமிருந்து அவர்களின் சிலரைத் தெரிந்தெடுக்கத் தேவரீர் சித்தங்கொள்வீராஞல் நாங்கள சதாகாலமும் எங்கள் முழு இருதயத்தோடும் தேவரீருக்கு நன்றியறிந்த தோத்திரம் சொல்லுவோம்:

''மருதமடுச் செபமாலை மாதாவே', ஏங்கள் மத்தியில் பரிசுத்தரான தேவ தொண்டர்கள் அதிகரிக்கச் செய்தருளும், ஆமென்''

''ஞானம்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

### 1970 — பங்குனி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 8 | ஞாயிறு | தபசுகால 4-ம் ஞாயிறு | [ஊ] |
| 9 | திங்கள் | தினப் பூசை | [ஊ] |
| 10 | செவ்வாய் | ,, | [ஊ] |
| 11 | புதன் | ,, | [ஊ] |
| 12 | வியாழன் | ,, | [ஊ] |
| 13 | வெள்ளி | ,, | [ஊ] |
| 14 | சனி | ,, | [ஊ] |

சத்தியவேத பாதுகாவலன்

## பாலைதீவுக்குப் பின்

யாழ்ப்பாணக் குடாநாட்டை, இல்லை இலங்கை முழுவதையுமே, சோகக்கடலில் ஆழ்த்திய கோர விபத்து நடந்து ஒருகிழமை சென்றும் அப்பரிதாபக் காட்சி எம் கண்முன்னே இன்னும் நிற்கின்றது. கதறி அழும் மக்களின் புலம்பல் நெஞ்சைக் கசக்கிப் பிழிகிறது. மகிழ்ச்சியுடன் உயிராகச் சென்ற யாத்திரிகர் பிணக்குவியல்களாகக் கொண்டு வந்திறக்கப்படும் காட்சியின் ஞாபகம் கல்மனதையும் கலங்க வைக்கிறது. ஆனுல், குடும்பங்களையே கருவறுத்த இந்த அவலவிபத்து, பால்மணம் மாறுப் பாலகரையும் வாழ்வின் வாயிலிலே அடியெடுத்து வைக்கும் இளைஞரையும் பலிகொண்ட இவ்விபத்து— இது நடந்திருக்கத்தான் வேண்டுமா?

தினந்தோறும் விபத்துக்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. எவ்வளவு எச்சரிக்கையாக இருந்தபோதிலும் விபத்துக்கள் ஏற்படாமல் இருக்குமென்று நாம் எதிர்பார்க்க முடியாது. மனிதனோ இயந்திரமோ ஒருபோதும் தவருது இயங்குவது முடியாத காரியம். தவறுகள் நிகழ்வது இயல்பு. தவிர்க்க முடியாத பல விபத்துகளும் உண்டு. ஆனுல், சென்ற வாரம் நடந்த விபத்து தவிர்த்திருக்க முடியாததொன்றுபோல் தோற்றவில்லை. விபத்தின் உண்மைக் காரணம் எதுவெனத் திட்டவட்டமாக இப்போது அறியப்படாதிருந்தபோதிலும் வதந்திகளை நோக்குமிடத்து அது வலிய வருவித்துக்கொண்ட விபத்தாகவே காணப்படுகின்றது. இரவுப்பிரயாணத்தில் அளவு மீறிப் பிரயாணிகளை ஏற்றிச் செல்வதே, ஆபத்தை விலைக்கு வாங்குவதாகும். இதில் தவறு ஏற்றியவர்பேரில் மட்டுமல்ல, தமது பாதுகாப்பைக் கருதாது ஏறிச்சென்றவர் பேரிலுந்தான். தமது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு யாத்திரை செய்யுமாறு புனித அந்தோனியார் கேட்கவில்லை.

நடந்து முடிந்ததையிட்டு நாம் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. இவ்விபத்துக் கற்பிக்கும் பாடங்களை மனதிற்கொண்டு இனி இத்தகைய விபத்துக்கள் நடவாமலிருப்பதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதுதான் அறிவுடைமையாகும். கடற்பிரயாணம் செய்யும் யாத்திரிகருக்கு மட்டுமன்றி, வாகனங்களை உபயோகிப்பவர் எல்லோருக்குமே இது ஒரு கண் திறப்பாகும். அளவு மீறிப் பிரயாணிகளை ஏற்றுவதால், அசட்டையால், கவனக்குறைவினுல், வாகன, வீதியொழுங்குகளை மீறி நடப்பதால், குடிபோதையில் வாகனங்களைச் செலுத்துவதால் ஏற்படும் விபத்துக்கள்தான் பெரும்பாலானவை என்று அறிகிறோம். இவையெல்லாம் தவிர்க்கப்படக் கூடியவை. கடந்தகால நிகழ்ச்சிகளின் படிப்பினைகளை உடனுக்குடன் மறந்துவிடாது, தொடர்ந்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அப்படித் தம்மைமீறி விபத்து ஏற்படின் அதிலிருந்து பிரயாணிகளை உடனடியாக மீட்கவும் தக்க வசதிகள் செய்யப்பட வேண்டும்.

நடுக்கடலிலே விபரிக்க முடியாத அவஸ்தைப்பட்டு இவ்விபத்திலே மரித்தவர்களுக்கு இரக்கம் நிறைந்த இறைவன் நித்திய இளைப்பாற்றியை அருளுவாராக. அவர்களது அழுது புலம்பும் உற்றூர் உறவினரின் சொல்லவொண்ணு மனத்துயரை நீக்கி ஆறுதல் அளிப்பாராக.

# மாதவன் சூசையின் வணக்கமாதம்

பரிசுத்ததந்தை 9ஆம்பத்திநாதர் சூசையப்பரின அர்ச்சியசிட்டவரெனப் புகழ்ந்தேற்றப் படுகிறவர், தேவதாயார் மாசில்லாமல் உற்பவித்தார் ளனபதை விசுவாசசத்தியமாகப் பிரசித்தஞ்செய்த திருமறையில் பெரும பிரஸ்தாபம் பெற்றுவருகிறவர். அவ்வாறு பிரசித்தம செய்தபொழுது அவர் ஒரு பெயர்பெற்ற ஓவியனைவரவழைத்தார். பரலோககாட்சியை அழகுறச் சித்திரிக்குமாறு அவனை வேண்டினார். அவனும தனது கைத்திறமையைக் காண்பித்து அக்காட்சியை அழகாகச் சித்திரித்து வருகையில் ஒரு நாள் பரிசுத்ததந்தை அங்கு பிரசன்னமானார். அதனைக் கூர்ந்து அவதானித்தார். சிறிதுவேளை எதனையோ ஆலோசித்தார். பின்னர் ஓவியனை விழித்து, அதில் "சூசையப்பர் எங்கே?" என்று வினவினார். அவர் மேகத்தினுள்ளும், பிரகாசத்தினுள்ளும் மறைந்திருக்கிறாரென அவனும் விடையளித்தான். அப்பொழுது அவர் "என்ன மறைந்திருக்கிறாரா? இருவரும் மறையவில்லை; ஒருவர்தான் மறைந்திருக்கிறார்; மகனே, அங்கே யேசு, இங்கே மரி, சூசைஎங்கே? அவரை இங்கேபோடு; யேசுவின்பக்கத்தில் அவருக்கு இடம்கொடு; யேசு, மரி, சூசை. ஆம், அதுதான் பொருத்தம்" எனப் பகர்ந்தார் பரிசுத்த தந்தை.

இந்த ஓவியனுல் சூசையப்பர் மறைக்கப்படுகின்றார். ஆனுல், கத்தோலிக்க மக்கள் பலராலும் அவர் மறக்கப்படுகின்றார். பரலோக திரித்துவத்தின் மூன்றும் ஆளாகிய பரிசுத்தஆவி மறக்கப்பட்ட தேவனாய் இருப்பது போலப் பூலோக திரித்துவத்தின் மூன்றும் ஆளாகிய சூசையப்பரும் மறக்கப்பட்டவராய் இருக்கின்றார். யேசு, மரி, சூசை பூலோகத்திலும்மூவர். பரலோகத்திலும்மூவர். ஒருவரைவிட்டொருவர் இணைபிரியாதவர். அவ்வாறுக, அவரை மறக்கவேண்டியதேன், மறைக்கவேண்டியதேன்.

யேசு, மரி, சூசையென்று தினமும் நாம் உச்சரிக்கும் திருநாமங்களில் கடைசி நாமம் சூசை. நமது ஆவி பிரியும் அந்தியவேளை நாம் உச்சரிக்கும் திருநாமங்களில் கடைசி நாமமும் சூசையே. கன்னித்தாயாரின் திருப்பத்தா சூசை. யேசுபாலனின் திருக்கைத்தாதை சூசை. தேவதாயாருக்குப் பின பரலோகத்திலும், பூலோகத்திலும் புனிதர்களிலே பெரும் புனிதராகத் திகழ்பவர் சூசை. இரட்சணியத்தின் விலைமதிக்கரிய கிரயமாகிய யேசுவின் திருஇரத்தத்தின் முதற்துளியை விருத்தசேதனத்தின் போது தமதுகரத்தால் சிந்தச்செய்து, மனுக்குல இரட்சணியகாதையின் முதல் அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தவர் சூசை. அதிபிதாக்களும், தீர்க்கதரிசிகளும் கண்டுகொள்ள ஆசித்துத் தவங்கிடந்தும் காணவியலாமற்போன உலக இரட்சகரைக் கண்ணுரக் காணவும், அவர் திருவாய்மொழியைக் காதாரக்கேட்கவும், அவரை ஏந்தவும், அணைக்கவும், முத்தமிடவும் வளர்க்கவும், காக்கவும மாபெரும் வரம்பெற்றவர் சூசை.



இன்னமும் அவர் புகழை எடுத்துக்கூற வேண்டுமா? மானிடனுக அவதரித்த தேவபாலனை ஆடலருள் முதன்முதலாகத் தரிசிக்கும் அதிர்ஷ்டம்பெற்றவர் சூசை. அவருக்கு யேசு என்னும் திருநாமம் சூட்டியவர் சூசை. அதிமுதல அத்திருநாமம் கோடானுகோடி பக்தகோடிகளால் இன்றுவரை அழைக்

— "ஞானம்" —

கவும், துதிக்கவும்பட வழிகாட்டியாய் இருந்தவர்சூசை. யேசு தச்சனின் மகனென்று அறியப்படக் காரணமாயிருந்தவர் தச்சுத்தொழிலாளியான சூசை. தேவவரங்களால் நிறைந்தவர்சூசை. ஏழுவரங்களால் சிறந்தவர்சூசை. திருக்குடும்பத்தின் தலைவர் சூசை. அக்குடும்பத்தைப் போஷித்தவர் சூசை. யேசுநாதருடையவும் திருக்கரங்களில் பாக்கியமான மரணமடைந்தவர் சூசை. நன்மரண தாதாவென்று அனைவராலும் கையெடுக்கப்படுகிறவர் சூசை. சுவிசேஷத்திலேயே நீதிமானென்று கொண்டாடப்படுகிறவர் சூசை. இவ்வாறுகச் சூசை சூசையென்று அவர் மகிமையை வர்ணிக்கிறதானுல் இன்னும அதிகமாக எழுதலாம். எழுதிக்கொண்டே போகலாம். திருக்குடும்பத்தின் தலைவரான அவரின் வல்லமையை ஆய்ந்தறிந்த திருமறையும் அவரைத் தனது பாதுகாவலாகத் தெரிந்திருக்கும்போதே அவருடைய பெருமையை இனிமேலும் எடுத்துக்கூறவேண்டுமா?

திருக்குடும்பத்தின் மூன்றும்ஆளாகிய அவரின் விசேட வணக்கத்துக்கென வருடத்தின் மூன்றுவது மாதமாகிய பங்குனி மாதத்தை நம்திருமறை அர்ப்பணித்திருக்கிறது. இந்தப் பங்குனி மாதம் இதோ வந்துவிட்டது. ஆகவே, 'சூசை மாமுனியைத் தோத்திரித்தறேற்ற மாதமாம் பங்குனி இதோ வந்ததிலடமாக" வென்று ஆனந்தமாகப்பாடி இந்த வணக்க மாதத்தை ஆரம்பிப்போம். இந்த மாதத்திலேஅவரைப் பற்றியே சிந்தனையாயிருந்து, "பாவாலும், மணப் பூவாலும் சூசை தாதாவைப புகழ்வோம்" என்று மனமார அவரைப் புகழ்ந்தேற்றுவோம்; 'வாழ்க யேசு கைத்தாதையே' என்று வாயார அவரை வாழ்த்திப் போற்றுவோம். எமது அவசியங்களிலெல்லாம் அவர் உதவியை நாடுவோம். ஆபத்துக்களிலெல்லாம் அவர் அடைக்கலத்தைத் தேடுவோம். எமக்கு வேண்டிய வரங்களையெல்லாம அடைந்தருளும்படியாய் அவரை இரந்து மன்றாடுவோம், எதிலும் மேலாய் "மரணம்வரும் போதருகில் வந்திருந்தருள்பாலிப்பாய்" என்று அல்லும் பகலும் அவரைக் கையெடுத்துவா மறவாதிருப்போம்.

## ஜனுதிபதி ரீற்ரோ பாப்பரசரைத் தரிசிக்க இருக்கிறார்

இந்த வசந்தகாலத்தில் யூகோஸ் லாவிய தேச ஜனுதிபதி மாஷல் யோசவ் ரீற்ரோ இத்தாலி தேசத்துக்குச் சென்று இத்தாலிய நாட்டின் ஜனுதிபதியாகிய திரு. சறகாத் அவரகளைத் தரிசிக்க இருக்கின்ருர். அவர் ரோமாபுரியில் தங்கியிருக்கும் நாட்களில் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசரையும் தரிசிப்பார் என நமபப்படுகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. [illegible] அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1970 ஆம் ஆ பங்குனிமீ 7ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று [illegible] "கத்தோலிக்க பிரஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org